பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்


விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 06 வியாழக்கிழமை (21.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 26

# தேசத்தின் குரல் மதியுரைஞர் பாலாவுக்கு புலம்பெயர் தமிழர்கள் உணர்வுபூர்வ அஞ்சலி

## நீண்ட பெருவரிசைகளில் வந்து மலர்வளையம் சாத்தி இறுதிப் பிரியாவிடை



லண்டன், டிசெம்பர் 21

விடுதலைப்புலிகளின் மதியுரைஞரும், தத்துவாசிரியருமான தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் இறுதி நிகழ்வுகளில் பல்லாயிரக் கணக்கான புலம்பெயர் ஈழத் தமிழர்கள் தமது இறுதி அஞ்சலிகளை உணர்வு பூர்வமாகச் செலுத்தினர்.

உலகின் பல நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள், தேசத்தின் குரலாக ஒலித்த பாலசிங்கத்தின் பூதவுடலுக்கு நீண்ட பெரு வரிசைகளில் காத்து நின்று மலர் வளையங்கள் சாத்தி தமது இறுதிப் பிரியாவிடையை நிகழ்த்தினர்.

உலகெங்கும் வாழும் தமிழ் ஆர்வலர்கள், நாட்டுப் பற்றாளர்கள் தமிழ்ப் பற்றாளர்கள், கல்விமான்கள், விடுதலைப் போராட்ட ஆதரவாளர்கள் என்று பல்லாயிரக்கணக்கான புலம்பெயர் தமிழர்கள் அலெக்ஸான்டிரா மாளிகைக்கு வந்து - நீண்ட வரிசைகளில் காத்திருந்து - மலர்வளையங்களைச் சாத்தி - பாலா அண்ணைக்குத் தங்கள் இறுதி மரியாதையை சோகம் ததும்பவும், உணர்வு பூர்வமாகவும் செலுத்திச் சென்றனர்.

வடக்கு லண்டன் அலெக்ஸான்டிரா மாளிகையில் இறுதி நிகழ்வுகள் நடைபெற்ற (06ஆம் பக்கம் பார்க்க)



★ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வன்னியில் தேசத்தின் குரல் பாலசிங்கத்திற்கு வீரவணக்கம் செலுத்துகிறார்.

★ 1) லண்டன் அலெக்ஸாண்டிரா மாளிகையில் அடேல் பாலசிங்கமும் குடும்பத்தினரும்.

2) நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் அஞ்சலி செலுத்துகிறார்.

3) இறுதி அஞ்சலி செலுத்தத் திரண்டவர்களில் சிறு பகுதியினர்

4) தேசத்தின் குரலின் பூதவுடல் மாளிகையிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்படுகிறது.

## குடாநாட்டில் துக்கம் அனுஷ்டிப்பு

### சகல பிரதேசங்களும் வெறிச்சோடின

யாழ்ப்பாணம், டிச. 21

லண்டனில் கடந்த 14ஆம் திகதி காலமான விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்தின் இறுதி அஞ்சலி நிகழ்வையொட்டி நேற்றுக் குடாநாட்டில் பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

'தேசத்தின் குரல்' பாலாவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் துக்கம் அனுஷ்டிக்குமாறு யாழ். மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியம் அழைப்பு விடுத்திருந்தது.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஏனைய நாளாந்த செயற்பாடுகளை நிறுத்தி இந்தத் துக்கதினத்தை அனுஷ்டிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது.

(06ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இந்தியா அங்கீகரிக்க வலியுறுத்து

## ஊடகவியலாளர் மாநாட்டில் கூட்டமைப்பு எம்.பிக்கள்

சென்னை, டிசெ.21

இந்திய அரசாங்கம், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு வலியுறுத்தி உள்ளது.

தமிழக முதல்வர் மு.கருணாநிதியை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

அதன் பின்னர் திராவிட இயக்கத்தமிழர் பேரவையின் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் பிரசன்னத்தில் பிற்பகல் 4மணியளவில் ஊடகவியலாளர் மாநாடு நடைபெற்றது.

அப்போதே கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் தமிழீழ விடுதலை போராட்டத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அவர்கள் நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தவை வருமாறு:

கடந்த ஓராண்டில் எமது கூட்டமைப்பின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பத்திரிகை

(05ஆம் பக்கம் பார்க்க)

### மன்னாரில் இராணுவ முகாம் மீது நேற்றுத் தாக்குதல்

மன்னார், டிசெ.21

மன்னார் நீலாச்சேனை இராணுவ முகாம் மீது நேற்று புதன்கிழமை அதிகாலை விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன் போது இராணுவ வீரர் ஒருவர் பலியாகியுள்ளதாகவும், இத்தாக்குதல் இராணுவத்தினரால் முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்தது.

(அ)

## யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் அகில இலங்கையில் முதலிடம்



யாழ்ப்பாணம், டிசெ.21

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்று கல்வித் திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்பட்டன.

அதன் பிரகாரம் பாடசாலை அதிபர்கள் ஊடாக முற்கொண்டு கிடைத்த சில முடிவுகள் வருமாறு:-

**யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை**

233.மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றினர். 102 பேர் சித்தியடைந்துள்ளனர்.

இந்தப் பாடசாலையில் இருந்து தோற்றிய [illegible] யாசாகர் 185 புள்ளிகளைப் பெற்று ([illegible] பார்க்க)

## 'தேசத்தின் குரல்' பாலாவுக்கு கிளிநொச்சியிலும் அஞ்சலி!

பரந்தன், டிச. 21

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்துக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கிளிநொச்சியிலும் நேற்று பெரும் நினைவு நிகழ்வு ஒன்று நடைபெற்றது.

லண்டனில் மதியுரைஞர் பாலாவின் [illegible] பெற்ற சமநேரத்தில் நடைபெற்ற இந்த நினைவு நிகழ்வில் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தர்களும் பங்கேற்றனர்.

ஏ-9 வீதியில் - கிளிநொச்சி கந்தசாமி கோயில் முன்பாக மதியுரைஞரின் உருவப்படம் தாங்கிய ஊர்தி பாண்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் முன்னே

(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### க.இளையதம்பி

(அதிபர், கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை)

மண்ணில் 23✱03✱1936 விண்ணில் 02✱01✱1995

காலங்கள் கடந்தாலும்
கோலங்கள் மாறினாலும்
சோகங்கள் சூழ்ந்தாலும்
கனவுகள் கலைந்தாலும்
நினைவுகள் மாறுவதில்லை
வாய்விட்டு அழுதேன்ன?
வார்த்தைகள் கூறியென்ன?
போய்விட்ட உங்களோடு
போனதே எங்கள் சந்தோஷம்
கண்ணீர்ப் பூக்களைக்
காலடியில் வைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

''மிதிலை''
கைதடி நுணாவில்,
சாவகச்சேரி. (58184)

**மகன்,
மனைவி.**

## சடலம் மீட்பு

கடந்த ஞாயிற்றுக் கிழமை காணாமற் போன முதியவர் நேற்றுக் காலை ஆரிய குளத்தில் சடலமாக மீட்கப்பட்டார்.

பலாலி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லையா சிவயோகம் (வயது 70) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

காலையில் ரோந்து சென்ற படையினரே இவரது சடலத்தை குளத்தருகே கண்டதாக விசாரணையில் தெரியவந்தது.

(202)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா காசிலிங்கம்

(சின்னத்தம்பி - சுருட்டுத் தொழிலாளி)



கென்னடி லேன், திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா காசிலிங்கம் 19.12.2006 செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதம் தம்பதியரின் மூன்றாவது புதல்வனும் வல்லிபுரம் - இராசம்மா தம்பதியரின் மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காந்தரூபன், ஜெயரூபன் (பிரான்ஸ்), வசந்தரூபன், ஜீவரூபன், பிரேமரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகுணா (சுவீடன்), சிவாஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் சோதிமணி (கனடா), கனகலிங்கம் (முன்னாள் குமரன் றெடிமேட் உரிமையாளர்), மணி, கந்தசாமி (காவேரி மில் உரிமையாளர்), யோகலிங்கம் (பிரியா மில் உரிமையாளர்), வேலாயுதபிள்ளை, கண்ணாம்பாள் (ராணி), கணேசலிங்கம் (வைத்திய கலாநிதி - மஸ்கெலியா), கிருஷ்ணமூர்த்தி, தனலட்சுமி (தனம்), புவனேஸ்வரி (வசந்தி), ராஜலட்சுமி (பவா- கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வரத்தினம் (கனடா), காலஞ்சென்ற இராசரத்தினம் (O.L.D.O. ஓவசியர்), மன்மதராசா, கணேசலிங்கம், குணரத்தினம், கதிர்காமநாதன் (கனடா), பாலேஸ்வரி, ஞானேஸ்வரி, சந்தானலட்சுமி (கொடிகாமம்), புஷ்பமணி, ஞானேஸ்வரி (பட்டு), செல்வராணி (பாமா), விமலாதேவி (பவா), யசோதா, லீலாவதி (மஸ்கெலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுஜிந்தன், இந்துஜன், அபிராமி, ஜென்சிகா, ஜெனிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2006) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (63592)

கென்னடி லேன்,
இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு.

தகவல்:
கா.புவனேஸ்வரி (மனைவி),
கா.காந்தரூபன் (மகன்).

### முருகேசு பரமலிங்கம்

( உரிமையாளர், லிங்கம் வர்த்தக நிலையம்.)

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு பரமலிங்கம் 20.12.2006 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாணந்துறை முருகேசு - மீனாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை - ஆச்சிமுத்து தம்பதியரின் மூத்த மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0777555327
0114617782

தகவல்:
முரளிதரன் (மகன்),
கிருஷ்ணவேணி (மனைவி).

### சின்னப்பு கனகசபாபதி

(இளைப்பாறிய ஆசிரியர்)



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் கனகசபாதி அவர்கள் 16.12.06 சனிக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் வேதநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னப்பு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பூலோகசிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி இளைப்பாறிய அதிபர் பூ.வெற்றிவேலு அவர்களின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.12.2006 ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இருளன் மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (63582)

தகவல்:
சிவராம் (மருமன்),
நல்லினி (மகள்).

### கிருஷ்ணர் குமாரசாமி



பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த கிருஷ்ணர் குமாரசாமி நேற்று (20.12.2006) புதன் கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் கிருஷ்ணர் - சின்னத்தங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் இராமுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் அன்னம்மா (லண்டன்), காலஞ்சென்ற அன்னலட்சுமி, இராசலட்சுமி (லண்டன்), முத்துக்குமாரசாமி (லண்டன்), காலஞ்சென்ற நவரட்ணம், திருமதி நாகரட்ணம் ஆகியோரின் மூத்த சகோதரரும் காலஞ்சென்ற அன்னம்மா, காலஞ்சென்ற கனகரட்ணம், காலஞ்சென்ற இராசையா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெகதீஸ்வரி, ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), கிருஷ்ணகுமாரி, கிருஷ்ணகுமார் (பிரான்ஸ்), இந்திரகுமார் (ஜேர்மனி), காலஞ்சென்ற செல்வகுமார், ராஜ்குமார் (கனடா), ராஜ்குமாரி, பிரேம்குமார் (கனடா), மகேந்திரகுமார் (நோர்வே), சதீஸ்குமார் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கனகசபாபதி, கமலாதேவி, காலஞ்சென்ற பாலசிங்கம், காலஞ்சென்ற சறோஜினிதேவி, கலாமதி, கமலாதேவி, சுந்தசாமி (நீர்வேலி ப.நோ.கூ. சங்கம்), நந்தினிதேவி,மாதினி, தாரணி ஆகியோரின் அன்பு மாமனும் ரஜீவன், ராகுலன், ஜெகன், கவிதா, ரேக்கா, ஜனனி, சிந்துகா, சைலஜா - பிரகதீஸ், துஷ்யந்தி, காயத்திரி, மயூரி, ஜெனிதா, துவாரகன், பவித்திரா, அகல்யா, ஜனாத்தனி,பிரசாந்தன், நிசாந்தி, நிருஜன், கிஷோர், துர்க்கா, கார்த்திகா, கீர்த்தன், திவேக்கா, தருண் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2006) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பொற்பதி வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (63595)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### வெற்றிவேலு செல்வரட்ணம்

திருநெல்வேலி இராமலிங்கம் வீதி, முடமாவடியையும் கொழும்பு 45, சென்ட் மேரீஸ் [illegible], மட்டக்குளியை வசிப்பிடமாகவும் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு செல்வரட்ணம் (இளைப்பாறிய பொறியிலாளர் - மீன்பிடி இலாகா) கனடாவில் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முடமாவடியைச் சேர்ந்த சுருட்டு முதலாளி செல்லத்துரை - தங்கப்பொன்னுவின் அன்பு மருமகனும் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் நிறஞ்சனா (சூட்டி), ரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சதானந்தனின் அன்பு மாமனும் சிறீ, கண்ணன் ஆகியோரின் சகோதரரும் தில்லைநடராசா, சண்முகராசா, தருமராசா ஆகியோரின் மைத்துனரும் ஜெனனி, சிவானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2006) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (63579)

மகாலட்சுமி (மனைவி),
10, KNOTWOOD CRESENT,
ONTARIO SCARBOROOEH,
MIXIV6 - CANADA.

தகவல்:
செ.சண்முகராசா-நாரகோட்டம்,கோண்டாவில்,
செ.தருமராசா-முடமாவடி, திருநெல்வேலி.

## மரண அறிவித்தல்கள்

### பெருமாள் பொன்னையா முத்துக்குமாரு

(உரிமையாளர்,ராஜேஸ்வரி தச்சுத் தொழிற்சாலை.)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கண்டி வீதி, அரியாலை சித்திவிநாயகர் கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது வன்னியில் வசித்துவந்தவருமாகிய பொன்னையா முத்துக்குமாரு 17.12.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பெருமாள் பொன்னையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் சுப்பையா - நாகம்மா தம்பதியரின் மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் அரியபுத்திரன் (பிரான்ஸ்), குகனேஸ்வரி, இராஜேஸ்வரி (பிரான்ஸ்), அமரர் திருநாவுக்கரசு, அமரர் சண்முகராஜா, அன்பரசன் (பிரான்ஸ்), நகுலேஸ்வரி, அமரர் முருநண்பன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மாவதி (பிரான்ஸ்), பத்மநாதன், யோகராஜா (பிரான்ஸ்), குமணன், கமலாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் அமரர் வேலுப்பிள்ளை, நாகரத்தினம், பரமசாமி, புண்ணியமூர்த்தி, கிருஸ்ணமூர்த்தி, அமரர் சிவகாமிஅம்மை ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் வன்னியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டிஸ்பன்சரி லேன்,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குமணன் (மருமகன்),
நகுலேஸ்வரி (மகள்).

### திருமதி கணபதிப்பிள்ளை மரகதம்

தேவரையாளி கந்தன் இல்லத்தைச் சேர்ந்த திருமதி கணபதிப்பிள்ளை மரகதம் நேற்று (20.12.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவன் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வல்லிபுரம் - சிவப்பர் தம்பதியரின் சிரேஷ்ட மகளும், வைரவன் - செல்லம் தம்பதியரின் மருமகளும் அருமைராசா (இளைப்பாறிய பொறியியலாளர்), சத்தியநாதன் அன்னலட்சுமி, எதிர்வீரசிங்கம் (திட்ட இணைப்பாளர், வை.எம்.சீ.ஏ - பருத்தித்துறை),தமிழ்மோகன் செல்வபதி, தெய்வேந்திரம் வரதராணி, கிருஷ்ணராஜன் (கோப்பாய் - ப.தெ.வ.அ.கூ. சங்கம்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற யோ.ச.சத்தியநாதன் (முன்னாள் கணக்குப் பதிவாளர், பனை அபிவிருத்திச் சபை), ரஜனி, தமிழ்மோகன், தெய்வேந்திரம், யசோதா (ஆசிரியை - அச்சுவேலி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற நடராசா - வள்ளிப்பிள்ளை, கந்தவனம் சின்னமணி, அமிர்தலிங்கம், காலஞ்சென்றவர்களான கந்தசாமி,தர்மன் (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்), வேலாயுதம் தங்கம்மா, வெற்றிவேல் சிந்தாமணி, சிவராசா, காலஞ்சென்ற காந்தி ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற இராசையா, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் சத்தியராசன் (பனை அபிவிருத்திச் சபை), துஷ்யந்தன் (லண்டன்),கௌசிகன், சற்குணன், துவாரகன், துவாரகா, மதுஷா, ஷியாம் கிருஷ்ணர், மோகன்ராஜ் (கல்வியியல் கல்லூரி, காலி), செந்தூரன், யோகேஸ்வரன், வியாசன், பரிசித் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2006) வியாழக்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தன் இல்லம்,
அல்வாய் மேற்கு,
தேவரையாளி.

தகவல்:
க.எதிர்வீரசிங்கம்.

### குழந்தைவேலு சண்முகம்



வேலணையைப் பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு சண்முகம் நேற்று (20.12.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் குலமணிதேவி, குலராசசிங்கம் (முன்னாள் ஊழியர், பாலேந்திராஸ் ரெக்ஸ்), தயாபரன் (ஹற்றன்), வனிதமலர் ஆகியோரின் தந்தையும் பரமேஸ்வரியின் மாமனும் ஜெயக்குமார் (கொழும்பு), ராஜ்குமார் (திருகோணமலை), சூரியகுமாரன் (கொழும்பு), லிசிக்குமார் (மாணவன், A/L விஞ்ஞானப்பிரிவு-2007) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2006) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பிற்பகல் 3 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

39,தாமரை வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி மாணிக்கம் பாலசுப்பிரமணியம்



இடைக்காடு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் மாரீசங்கூடல், இளவாலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் பாலசுப்பிரமணியம் (18.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாரீசன்கூடல்,
இளவாலை.


தகவல்:
பாலசுப்பிரமணியம் (கணவர்).

பாஜாஜ் முச்சக்கர, இருசக்க உதிரிப்பாகங்கள்
அனைத்தும் குறைந்த விலையில் பழைய
விலையில் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்:
கோப்பாய் வீதி, ஞானவைரவர் கோவிலடி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய் (ஆரணி ஓட்டோஸ்).
Tel. No.: 021 222 6942

சிறு விமான சேவை
யாழ். - கொழும்பு விமான சேவைகள்
தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது.
உடனடிப் பயணம்.
தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811, 0785325501.
(சி/50463)

## மரண அறிவித்தல்கள்

### சேனாதிராசா இராசம்மா



இல.34, குமாரசாமி வீதி, கந்தர்மடத்தைப் வசிப்பிடமாகக் கொண்ட சேனாதிராசா இராசம்மா நேற்று (20.12.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் சேனாதிராசாவின் அன்பு மனைவியும் சசிதரன் (கனடா), சிறிநாகேஸ்வரா ஆகியோரின் பாசமிகு தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2006) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

34, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்.
தொ.பே: 222 7302

தகவல்:
சே.சிறிநாகேஸ்வரா
(மகன்).

### செல்லையா சிவயோகம்



யாழ்ப்பாணம், பலாலி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவுகம் கொண்ட செல்லையா சிவயோகம் 17.12.2006 ஞாயிற்றுக் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - நல்லபிள்ளை தம்பதியரின் மருமகளும் செல்வபத்மாவதி, கபிலராஜன், ரகுலராஜன்(வவா), விமலராஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் சின்னத்துரை, ரஞ்சினிதேவி, மஞ்சுளாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற இராசையா, பூவிலிங்கம், சிவராசா, செல்லம்மா, பாக்கியம்(நீர்கொழும்பு) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சண்முகம், மாணிக்கம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிகாரி லண்டன்), அன்னம்மாவின் (கொழும்பு) மைத்துனியும் வனஜா, கலாரூபன், வினோபாகரன், சுதர்சன், சுதர்சினி, நிஷாந்தினி, சதானந், சாருஜன், சுதேஷ், அரவிந்தன், மயூரன் ஆகியோரின் பேர்த்தியும் டரன்சஞ்சீவன், கர்சன், திவ்வியா, டயன்சன், கீர்த்தி, அஞ்சலி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2006) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

05, பலாலி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 5386 (63598)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி ச.சிவகுமார் அவர்களின் பாசமிகு தந்தை

**வல்லிபுரம் கதிரவேலு**

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும் பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி

அதிபர், ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள்.

## நிஜமொன்று நிழலாகி ஓராண்டு

மலர்வு 14 - 01 - 1982



உதிர்வு 01 - 01 - 2005

**சிவலிங்கம் சிவரூபன்**

திதி: பிரதமை

ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில்
கொண்டு ஓராண்டு ஆனதுவோ?
நீர் என்றும் எம்நெஞ்சில் ஜீவ நதியே
மலர்ந்த உன் முகம் என்றும் எம் நெஞ்சில்
அழியா நந்தவனம்.

கரந்தன். (59678) குடும்பத்தினர்.

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 15 - 06 - 1935



விண்ணில் 21 - 12 - 2001

**அமரர் மரியாம்பிள்ளை வைற்றஸ்**

(ஓய்வுபெற்ற உப தபாலதிபர், தாழையடி)

குடும்பத்தின் குலவிளக்காய் என்றும் மறவா
அன்புடன் அரவணைத்து வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
ஒளியூட்டிய அன்புத் தந்தையே அப்பா!
ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
நீங்காத நினைவுடன்
ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் வேண்டுகின்றோம்.

சுவிஸ். (59688) மனைவி, மகன், ஜெபா குடும்பம்.

## மரண அறிவித்தல்

### தம்பிராசா இந்திரகுமார் (அப்பன்)



புங்குடுதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா இந்திரகுமார் 18.12.2006 திங்கட் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா - கோதைநாயகியின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிரவேலு - நாகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் கலைவாணியின் அன்புக் கணவரும் அமரர் மோகனாம்பாள், ஜெகதாம்பாள் (யாழ்.), இராசகுமார் (கொழும்பு), ஜனதாம்பாள் (சுவிஸ்), அமரர் கர்ணகுமார், தாருகா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் உருத்திரகுமாரன் (யாழ்.), சந்திரதாஸ் (சுவிஸ்), யோகேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான செல்லையா மீனாட்சி, தளையசிங்கம் மற்றும் ஆச்சிக்கண்ணுவின் அன் புப் பேரனும் லதீபா, லர்ஷிகா, லதுஷன், லதுஷா (யாழ்), ஜகானா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடிச் சந்தி, கொக்குவில். (63530)

தகவல்: உருத்திரகுமாரன் (வெள்ளை-மைத்துனர்).

## விற்பனைக்குண்டு

எம்மிடம் 45' 15' அடி நீள அகலமுள்ள கட்டடத்திற்குத் தேவையான கூரைத்தகடு (சீற்) 6' மற்றும் அதற்குரிய கூரை மரங்கள் என்பன விற்பனைக்குண்டு. வாங்க விரும்புகின்றவர்கள் பூம்பொழில், நுணாவில் பருத்தித்துறை வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி என்னும் முகவரியில் தொடர்புகொள்ளவும். (63565)

## தவறிவிட்டது

மண்டைதீவு கிழக்கு, மண்டைதீவை நிரந்தர முகவரியாகக் கொண்ட தற்போது 40/18, சீனியர் லேன், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் செல்வி தேவகி தியாகராமூர்த்தி என்பவருடைய தே.அ.அ. (இல.746581742V), வி.அ.அ. (இல.0906028203) என்பன யாழ். ஆஸ்பத்திரி வீதி, நகரப்பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 021 222 7629 தொ.பே. இலக்கத்துடன் தொடர்புகொண்டு அல்லது 55A, அரசடி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவுங்கள்.

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் 2007ஆம் ஆண்டுக்கான பொருள்கள் வழங்குநர்கள், சேவைகள் வழங்குநர்கள் ஆகியோரைப் பதிவு செய்தல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குப் பொருள்கள் வழங்குநர்கள், சேவைகள் வழங்குநர்கள் ஆகியோரைப் பதிவு செய்வதற்கான இறுதித் திகதி 15.12.2006 இலிருந்து 26.12.2006 வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே, இதுவரை பதிவுசெய்யாத நிறுவனங்கள் தமது பதிவுகளை 26.12.2006 பி.ப. 4 மணிக்கு முன்னர் எமது காரியாலயத்தில் பதிவுசெய்யவும். மேலும் விவரங்களுக்கு 13.11.2006, 14.11.2006 ஆகிய திகதிகளில் பிரசுரமாகிய எமது விளம்பரங்களைப் பார்க்கவும்.

வைத்திய கலாநிதி ஏ.ஈ.ஞானஜோதி
பணிப்பாளர், போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(ச/51606)

## VARATHAN LEARNERS

யாழ். நகரில் சிறந்த முறையில் சேவையாற்றி பல நல்லொழுக்கமுள்ள நற்சாரதிகளை உருவாக்கிய எமது நிறுவனம்

நாட்டு நிலைமை காரணமாக இடைநிறுத்தி வைத்த எமது சாரதி பயிற்சி தொடர்ந்து நடைபெறுகிறது. பயிற்சி எடுப்போருக்கு ஒரு மாத காலத்திற்குள் பரீட்சை (எழுத்து), செயன்முறைப் பரீட்சை என்பன நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகம்
வரதன் லேனர்ஸ்.
133, K.K.S. றோட்,
யாழ்ப்பாணம்.

சாவகச்சேரி.
T.P.: 222 8037
(63561)

## கண்ணீர் அஞ்சலி

எமது ஸ்தாபன உரிமையாளர்களான வீ.ஜெயசீலன், வீ.ஸ்ரீசக்திவேல் ஆகியோரின் அன்புத் தந்தையான

**செல்லையா வீரசிங்கம்**

அவர்களின் மறைவையொட்டி துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர்கள்,சாஹுகா நகைமாடம்,
ஸ்ரீ மீனாட்சி தங்கமாளிகை, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளரும் எமதுபீட மாணவி **செல்வி ஜெயகரி** அவர்களின் அன்புத் தந்தையுமான

**இ.விஜயரெத்தினம்**

அவர்கள் 18.12.2006 அன்று சிவபதமடைந்தார். அவர்களுக்கு எமது யாழ். விவசாயபீட மாணவர் ஒன்றியம் கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றது.

மாணவர் ஒன்றியம்,
விவசாய பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

## 19ஆம் வருட நினைவு அஞ்சலி

மலர்வு 09 - 02 - 1937



உதிர்வு 21 - 12 - 1987

**அமரர் சீ.செல்லத்துரை**

(முன்னாள் மேற்பார்வையாளர் ,யாழ்.போதனாவைத்தியசாலை)

ஆண்டு பல கடந்தாலும்
ஆறிடுமோ எம் இதயம்-எமை
ஆற்றிட யாருளர் இவ்வுலகில்
எம் உயிர் உள்ளவரை
நினைத்திடுவோம் உங்களையே.

'ஈஸ்வரி வாசம்',
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (63576)

தங்கள் நினைவுடன் வாழும்
அன்புமனைவி,பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,உறவினர்கள்.

## முதலாம் ஆண்டு நெஞ்சகலா நினைவஞ்சலி

தோற்றம் 02 ✱ 05 ✱ 1943



மறைவு 01 ✱ 01 ✱ 2006

**அமரர் சிவப்பிரகாசம் இராசகுலசிங்கம்**

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்,வருமானவரித் திணைக்களம்)

**திதி: 21-12-2006**

ஒரு கூட்டுப் பறவையாய் ஒன்றாய் வாழ்ந்தோமே
ஒருவருக்கொருவரென வாழ்ந்து வந்தோமே
உங்கள் திருவுருவம் என் மனதைவிட்டு நீங்காது
மண்ணில் உங்கள் மலர்ந்த முகம் காணாது
கண்ணீர் சிந்துகின்றேன் கலங்கி நிற்கின்றேன்
ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை எம் துயரம் அப்பா!
வானுறையும் தெய்வமாய் வழிநடத்துவாய் அப்பா.

உங்கள் ஆத்மசாந்திக்காக எந்நாளும் பிரார்த்திக்கும்:
மனைவி திலகேஸ்வரி.


தம்பலத்தனை,
துன்னாலை வடக்கு. (58192)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் | 16 ஆம் ஆண்டு நினைவு நாள்



**சாணையன் சின்னத்தம்பி**

(கொழும்பான்)



**சின்னத்தம்பி குகனேஸ்வரி**

| | | |
|---|---|---|
| 07 - 01 - 1945 | மலர்வு | 08.12.1976 |
| 21 - 11 - 2006 | உதிர்வு | 13.04.1991 |

இன்று(21.12.2006)வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சரஸ்வதி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**அமரர் தில்லைநடராசா லோகநாதன் (தங்கத்துரை)**

(வல்வை நெடியகாட்டைச் சேர்ந்தவரும் MITCHAMBLUES விளையாட்டுக்கழகத்தின் ஸ்தாபக உறுப்பினரும் ஆவார்)

| மலர்வு | திதி: | உதிர்வு |
|---|---|---|
| 09-01-1956 | பிரதமை | 01-01-2006 |

வல்வை முதல் லண்டன் வரை
வாய்நிறைந்து சிரிக்கவைத்தாய்
வாழும்போதோ எங்களுக்கு - நல்ல
சேதிகளே சொல்லி வைத்தாய்
இன்றுமட்டும் இப்படியேன் - நாங்கள்
வாட்டமுற "நீ" மறைந்தாய்
இல்லை "வல்வை தந்த வள்ளலே......"
விடிந்துவிட்டது எழுந்துவா!.... எழுந்துவா!!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்: தி.செல்வராசா (சகோதரன்),
[illegible], வல்வெட்டித்துறை.

இன்று (21.12.2006) வியாழக்கிழமை காலை நடைபெறும் எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(59694) - குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் 31ஆம் நாள் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் முருகேசு சின்னத்துரை — திருமதி சின்னத்துரை சின்னம்மா

மண்ணில்: 01.05.1909 — மண்ணில்: 05.02.1917
விண்ணில்: 15.12.1997 — விண்ணில்: 21.11.2006
திதி: அபரபக்க துதியை — திதி: பூர்வபக்க பிரதமை

21.11.2006 இல் இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாய் திருமதி சின்னத்துரை சின்னம்மா அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்தும் அனுதாபச் செய்திகளைப் பத்திரிகைகளில் தெரிவித்தவர்களுக்கும் வரமுடியாது வருத்தம் தெரிவித்தவர்களுக்கும் மேலும் சகல வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் உற்றார், உறவினர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (21.12.2006) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் மேற்கு, வட்டுவிளி கண்ணகை அம்மன் கோயிலடி. (56934) குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

மண்மகிழ 05 ★ 01 ★ 1986 — விண்நெகிழ 21 ★ 11 ★ 2006



அமரர் தில்லைநடராசா ரகுபரன்

(தலைவர், இளைஞர்பிரிவு சத்யசாயி சேவா நிலையம் - சுன்னாகம்)

கொடிய நோயதை யுமக்குள் நீரடக்கி
யெமைத்தேற்றி ஆறுதல்பல கூறுவீரே!
காலனவன் அழைப்பதை நீரறிந்தும்
ஒரு சொல் கூடக் கூறாமல் சென்றீரே!

எமது அன்புச் செல்வத்தின் 31ஆம் நாள் நினைவுதினம் இன்று (21.12.2006) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயிலணி வீதி, சுன்னாகம். (59677)

தகவல்: இ. தில்லைநடராசா (தந்தை - முன்னாள் ஊழியர் சுன்னாகம் ப.நோ.கூ.ச.)

### தவறிவிட்டது

10.12.2006 அன்று இரத்தினகுமார் மோகனராஜ்குமார் என் பவரது அடையாள அட்டை (790172990V) மற்றும் ஆவணங்கள் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

மு. பாக்கியநாதன், கலைவாணி மில்லேன், கோக்குவில் கிழக்கு, கொக்குவில்.

### விற்பனைக்கு

புத்தம் புதிய மாருதி கார் 800 AC உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய இல. 021 222 5477 - Dr. சுபாஷன்.

### தேவை

01. தாதியர் / தாதி பயிலுநர்
02. மருந்தாளர் / பயிலுநர்.

இடம்: யாழ். வைத்தியசாலை 284, பலாலி வீதி, கந்தர்மடம்.
காலம்: 22.12.2006 (முற்பகல் 10 மணி)
(சகல ஆவணங்களுடன் நேரில் வரவும்)
தொ.பே. 222 5489.

### கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்குரிய சிறி அண்ணா, ரவி அண்ணா (ஸ்ரீடிஜிட்டல் கலர்லாப், ரவி டிஜிட்டல் கலர் லாப் ஆகியோரின் பாசமிகு தந்தை

செ. வீரசிங்கம்

அவர்களின் மறைவையொட்டி துயரத்தில் தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

K.V.S. திரு, திரு ஸ்ரூடியோ, பருத்தித்துறை.

### கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளராகக் கடமையாற்றும் இராசரத்தினம் அறிவரசன் அவர்களின் தாய்

திருமதி இராசரத்தினம் சிவகாமி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(56692)

ஊழியர் நலன்புரிச் சங்கம், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்).

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 18 ★ 06 ★ 1925 — மறைவு 22 ★ 11 ★ 2006



அமரர் வயிரமுத்து செல்லையா

22.11.2006 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்தும் அனுதாபச் செய்திகள் மற்றும் பத்திரிகைகளிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் தெரிவித்தும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (21.12.2006) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலடிவீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (56835)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

### இதய அஞ்சலி

மாவிட்டபுரம் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும் இச்சங்கத்தின் நீண்டகாலமாக தலைவராக இருந்து சங்கத்தை வழிநடத்தியவருமாகிய

அரியகுட்டி நாகராஜா அவர்களின்

அமரத்துவம் எய்திய செய்திகேட்டு மருதடி விநாயகர் ஆலய சமூகம் மிகுந்த கவலைக்கு உள்ளாகியிருக்கின்றது.

அன்னாரது இழப்பு எமக்கு ஈடுசெய்ய முடியாதது.

அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மருதடியானை பிரார்த்தித்து நிற்பதோடு, அவர் தம் குடும்பத்தினருக்கும் மனச்சாந்தி உண்டாக மருதடியானைப் பிரார்த்திக்கின்றோம்.

மாவிட்டபுரம் மருதடி விநாயகர் ஆலய நிர்வாகத்தினர் சபையினரும் வழிபடுவோர் சங்கத்தினரும். (59709)

### கண்ணீர் அஞ்சலி

எமது ஆசிரியர் இ. ஞானேஸ்வரனின் அன்பு மாமி

திருமதி புவனேஸ்வரி குணரத்தினம் அவர்கள்

16.12.2006 காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவிக்கின்றோம்.

ஆசிரியர் கழகம், யா/ மகாஜனக்கல்லூரி. (63552)

### நன்றி நவிலல்



அருமருந்தாய் நமக்கு ஆரோக்கியமளவைத்து
இருக்கையில் அமர்ந்தீரு உருவாக்கி வைத்தவரே!
பெருமையுறு கல்வியினை போக்கெனாய் கற்கவைத்து
பாரெங்கும் கால் பதிக்க பாதித்திருந்த ஐயாவே!
குருவாய் செய்தானி கருப்பாக வழிவிளக்க
கணமறிந்த கைவிளக்கே கோபுரத்து ஒளியானாய்
ஒரு பிடி உணவதாய் உள்ளவரை விருந்தானாய்
ஊருக்காய்இறைத்தீர் எமையாள வைத்தநாயா

20.11.2006 இல் மரணமடைந்த தந்தையின் மரணச் செய்திகேட்டு ஓடோடி வந்து எமக்குப் பலவழிகளிலும் உதவிகள் புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் தொலைபேசி, தந்தி, தபால் வழியாக அனுதாபம் தெரிவித்தோர்களுக்கும், மலர் வளையங்கள், மலர் மாலைகள், மலர் அஞ்சலி செலுத்தியோருக்கும் கண்ணீர் அஞ்சலிகள், பத்திரிகை அஞ்சலி செலுத்தியோருக்கும், இறுதி அஞ்சலி நிகழ்வையும் இரங்கல் நிருப்பலியையும் நிறைவேற்றிய அருட்தந்தையருக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர், வாடிக்கையாளர், அன்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர், ஆரோக்கிய வாச வைத்தியசாலை மட்டுவில். (63554)

### காந்திக்கிராம் கிராமிய பல்கலைக்கழகம் (இந்தியா) தொலைதூரக்கல்வி கற்பதற்கான ஓர் பொன்னான வாய்ப்பு

சேவா லங்கா மன்றம் காந்திக்கிராம் கிராமிய பல்கலைக்கழகத்துடன் (காந்திக்கிராம் கிராமிய பல்கலைக்கழகம், காந்திக்கிராம் - 624302, திண்டுக்கல், தமிழ்நாடு, இந்தியா.) இணைந்து இலங்கை மாணவர்கள் கல்வி கற்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. விருப்பமுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இங்கு இரண்டு பிரிவுகள் உள்ளன.

1. Regular Programme (Group A)
2. Diploma in Certificate Programme (Group B)

Regular Programme, இப் பல்கலைக்கழகத்தில் 2007ம் ஆண்டு ஆனி மாதம் ஆரம்பிக்கவுள்ளது. தெரிவு செய்யப்படும் மாணவர்கள் 2007ம் ஆண்டு தை மாதம் இந்தியா செல்ல முடியும். Diploma in Certificate Programme பயில விரும்புபவர்கள் ஒன்று அல்லது இரண்டு பாடநெறிகளை கற்க முடியும்.

**GROUP(A): REGULAR PROGRAMMES**

| Courses | Yrs | Courses | Yrs |
|---|---|---|---|
| Dip. In Agriculture | 2 | B.Tech. Habitat Engineering | 4 |
| PG Dip.In Seed Production | 1 | B.Tech.Sustainable Technology and Rual Industries | 4 |
| M.Sc.Diary Science | 2 | MBA-Disaster Management | 2 |
| M.Sc.Medicinal Plants | 2 | MA Sociology | 2 |
| MA English & Communicative Studies | 2 | M.Phil.Development Sociology | 1 |
| M.Phil.English&CommunicativeStudies | 1 | MBA Small Business Management | 2 |
| B.Sc. /M.Sc.Physics | 3/2 | MBA Rural Industries Management | 2 |
| B.Sc/M.Sc.Chemistry | 3/2 | BBA Rural Industries &Management | 3 |
| B.Sc.Maths | 3 | MA.Development Administration(for A/L Passed) | 5 |
| M.Sc.Tech.(Industrial Maths with Comp. Applications) | 3 | BA.Gandhian Social Work | 3 |
| M.Sc.Extension &Community Development | 2 | MA Human Resource& Conflict Management | 2 |
| B.Sc.Homescience | 3 | B.Com.Cooperation | 3 |
| M.Sc.Food Science&Nutrition | 2 | M.Sc.Geo Informatics | 2 |
| MCA(Master in Computer Applications) | 3 | M.Phil. Micro-Level Planning | 1 |
| M.Sc.Information Technology | 2 | MBA Rural Project Management | 2 |

**GROUP(B): ADD-ON PROGRAMMES(3-6MONTHS)**

| | |
|---|---|
| Medical Lab Technology | Dip.in Human Rights* |
| Cert.in English Communication(Advanced) | Dip.in Entrepreneurship* |
| Dip.in English Communications Skills | Dip.in Garment Technology |
| Dip.in Biological Technologies | Dip.in Natural Dyes |
| Cert.in Multimedia | Dip.in Project Planning |
| Dip.in Fruit Processing | Dip.in Training and Development |
| Dip.in Bakery&Confectionary | Dip.in Journalism |
| Dip .in Cost Effective Construction Technology | Dip.in Mass Communication |

விண்ணப்பப்படிவங்களை இலங்கையிலுள்ள சேவா லங்கா மாவட்ட காரியாலயங்களில் நேரடியாக பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி 24.12.2006. தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கான நேர்முகத்தேர்வு தை மாதம் 2007ம் ஆண்டு 3ம், 4ம் கிழமைகளில் கொழும்பு, கண்டி, வவுனியா ஆகிய இடங்களில் நடைபெறும்.

E-mail : gandhigram@sewalanka.org
Website : www.gru.sewalanka.org
Tel : 0602166333, 0602166334, 0602166335

### சமுர்த்தி புலமைப்பரிசில் நேர்முகப் பரீட்சை நாளை

தென்மராட்சி, டிசெ.21

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்று புதன் கிழமை நடைபெற விருந்த சமுர்த்தி புலமைப்பரிசில் திட்டத்தில் மாணவர்களை தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெற்ற, சமுர்த்தி சமூக பாதுகாப்பு அங்கத்துவம் பெற்ற குடும்பங்களைச் சேர்ந்த 20 மாணவர்கள் சமுர்த்தி 'சிப்தொற' புலமைப்பரிசில் திட்டத்தில் இணைப்பதற்காக இந்த நேர்முகப் பரீட்சை நடத்தப்படவுள்ளது. (202)

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
Jaffna Head office No 15, Sirambiyadi Lane, (off Stanly Rd.) 021-222 6250, 0777 222422
Branch office No 167, Kasthuriar Rd, (Near Uthayan Publication) Jaffna.
COMPUTER EXPRESS
3 மாதகால
Diploma in Computerized Accounting
Accpac+QuickBooks Premier+MYOB
ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.
Tally Accounting Package
புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.
வகுப்புக்கள் ஆரம்பம்:
Batch I : 21/12/2006
Batch II : 23/12/2006
Batch III : 24/12/2006
Batch IV : 25/12/2006
Course Contents
Fundamentals of IT, Manual Accounting, Financial Accounting, Cost Accounting, Stock Control, Taxation (Including VAT), Bank Reconciliation, Budgeting, Fore Casting, Business Planing

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

## அக்கறை காட்டுமா அரசு?

தென்கிழக்காசிய நாடுகளை உலுப்பி, பெரும் உயிர்ச் சேதங்களையும் உடைமை நாசத்தையும் விளைவித்த "சுனாமி" என்ற ஆழிப்பேரலை தாக்கி, இன்னும் ஐந்து நாள்களில் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன.

ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும் புனர்நிர்மாணப் பணிகளுக்குமென ஐக்கிய நாடுகள் உட்பட்ட சர்வதேச மட்டத்தில் உதவும் திட்டங்களும் அமைப்புகளும் உருவாக்கப்பட்டன.

இலங்கையைப் பொறுத்த அளவில் ஆழிப்பேரலையால் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் வடக்கு - கிழக்கைச் சேர்ந்தவை. ஆனால், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகள் இப்பிரதேசங்களில் ஒப்பீட்டளவில் மிக மந்தமாகவே, குறைவாகவே நடைபெற்றுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் ஆழிப்பேரலை அனர்த்த மீளாய்வு அலுவலகத்தின் அறிக்கை, இதனை ஊர்ஜிதம் செய்வதாக அமைந்துள்ளது. "ஒஸ்ஈ" என்ற அந்த அலுவலகத்தின் விசேட தூதுவர் வெளியிட்ட அறிக்கையில் இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில், குறிப்பாக வடக்கில் இந்தப் பணிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானத்துக்கான பொதுக் கட்டமைப்பு (P-TOMS) திட்டமிடப்பட்டவாறு செயற்படாமையே இதற்குக் காரணம் என்று விசேட தூதுவர் மந்தீப் கிரேவால் தமது பிந்திய அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

ஆழிப்பேரலைப் பாதிப்புகள், இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிக்கு மறைமுகமாக ஓரளவிலேனும் உதவும் என்று இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்நாட்டில் ஓர் எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், அது வெறும் கற்பனைக் கோட்டையாக இடிந்து விழுந்து போனமை தெரிந்ததே.

ஆரம்பத்தில், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள் வழங்கக் கூடிய நிதி உதவிகளை தக்கவாறு பங்கீட்டு மறுவாழ்வு மற்றும் புனர்நிர்மாண வேலைகளைச் செய்வது சிறந்தது என்ற கருத்து நிலவியது.

அதன் பெறுபேறாக, ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானத்துக்கான பொதுக் கட்டமைப்பு ஒன்றை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டது. ஆனால், அந்தக் கட்டமைப்பு செயல் வடிவம் பெறும் வாய்ப்பு அற்றுப் போயிற்று.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்படுவதற்கு முன்னரே சமாதானப் பேச்சுகளின் பலாபலனாக "சிரான்" என்ற ஓர் உபகுழு தோற்றுவிக்கப்பட்டது. வடக்கு - கிழக்கு மக்களின் பொதுவான, குறிப்பாக பொருளாதார மற்றும் அபிவிருத்திப் பிரச்சினைகளை ஆராய்ந்து, வேண்டிய திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துவது என்பதே அந்த உபகுழுவின் பிரதான இலக்காக இருந்தது.

"சிரான்" உப குழு சுமார் ஒரு வருடத்திற்கு இயங்கி தனது பணிகளை முன்னெடுத்தது. ஆனால், பொதுக் கட்டமைப்பு உருவாகாததால் அதுவும் செயலிழந்து போயிற்று.

வடக்கு - கிழக்கில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட இடங்களின் மீள் கட்டுமானப் பணிகளை "சிரான்" உபகுழு ஊடாகச் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு விடுதலைப் புலிகள் அரசிடம் கோரினர்.

ஆனால், அரசாங்கத் தரப்பு அந்தக் கோரிக்கையை நிராகரித்தது. அமைச்சு ஒன்றினூடாகவே நிதியை வழங்க முடியும் என்று அரசாங்கம் தெரிவித்தது.

ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானத்துக்கான பொதுக் கட்டமைப்பு ஒன்றை நிறுவுவது சட்டவிரோதம் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அத்தோடு அது பொசுங்கிப் போனது.

இப்போது, அரசாங்கம் தனக்குக் கிடைக்கும் நிதி உதவிகளைக் கொண்டு தெற்கில் பெரிய அளவிலும் கிழக்கில் சிறிய அளவிலும் மீள்கட்டுமானங்களைச் செய்து வருகிறது. அவற்றுக்கு மேலதிகமாக பல சர்வதேச தொண்டு நிறுவனங்களும் நிதி உதவிகளையும் உபகரண உதவிகளையும் செய்து வருகின்றன.

ஆனால், வடக்கு மற்றும் கிழக்கின் தமிழர் பிரதேசங்களினது கதியோ வேறாகிவிட்டது. ஒரு சில சர்வதேசத் தொண்டு நிறுவனங்களின் உதவியால் அங்கும் இங்குமாக சிறிய அளவிலேயே, ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள்கட்டுமான உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

இறுதிச் சமாதான நிலை எட்டப்படாத சூழ்நிலையிலும், போர் நிறுத்த ஒப்பந்தம் மட்டுமே நடைமுறையில் உள்ள நிலையிலும், இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கான ஏதுக்கள் குறைந்திருந்தும், ஆழிப்பேரலை தாக்கியபோது, இன முரண்பாடுகளால், இலங்கையில் 55 பேர்களில் ஒருவர் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாக இருந்தனர் -

ஆகையால், ஆழிப்பேரலையால் இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் உதவிகளை, மோதல்களால் இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் உதவிகளுடன் ஒப்பிடவேண்டிய தேவை உள்ளது. இத்தனைக்கும் மோதல்களால் இடம்பெயர்ந்தவர்களும் ஆழிப்பேரலையால் இடம்பெயர்ந்தவர்களும் மிகவும் வெவ்வேறு தன்மையினர் - வகையினர் என்று விசேட பிரதிநிதி தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். -

அத்தோடு-

ஆழிப்பேரலை அனர்த்த மீள் கட்டுமானத்துக்கான பணிகளை அரசும் விடுதலைப் புலிகளும் சேர்ந்து, ஒத்துழைப்புடன் ஆற்றவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

எனினும் இலங்கையில் பாதுகாப்பு நிலைமையும் - சமாதானப் பேச்சுகளுக்குத் தேவையான பரஸ்பர நம்பிக்கையும் மோசமடைந்தும் தேய்ந்தும் போவதால் இரு தரப்பு ஒத்துழைப்பு கேள்விக்குரியதே என்றும் மந்தீப் கிரேவால் வருத்தம் தெரிவிக்கத் தவறவில்லை.

ஆயினும் -

ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானத்துக்கான பொதுக் கட்டமைப்பு ஒன்று இல்லாததால் 'சுனாமி' தாக்கத்திலிருந்து இலங்கையர்களால் மீள முடியவில்லை என்று கிரேவால் எடுத்துரைத்துள்ளார்.

சமாதானத்தை ஏற்படுத்துவதில் முழு ஈடுபாடும் இன்றி இரட்டை முகம் காட்டும் அரசாங்கம் மேற்சொன்ன அறிக்கையில் இம்மியும் அக்கறை கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது.

# தமிழக முதல்வருடன் கூட்டணி எம்.பிக்கள் நேற்று ஒருமணி நேரம் சந்தித்துப் பேச்சு

## கருணாநிதியின் அழைப்பின் பேரில் சென்றனர்

சென்னை, டிசெ.21

இலங்கையில் இருந்து சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்று தமிழ் நாட்டில் முதல்வர் கருணாநிதியைச் சந்தித்தது.

தமிழக முதல்வரின் அழைப்பின் பேரில் திடீரென சென்னை சென்ற இரா. சம்பந்தன் தலைமையிலான எம்.பிக்கள் குழுவினர் நேற்று நண்பகல் முதல்வர் கருணாநிதியைச் சந்தித்து ஈழத் தமிழர் நெருக்கடி குறித்து சுமார் ஒரு மணி நேரம் பேச்சு நடத்தினர் என்று அறிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குழுவினருக்கும், கலைஞர் கருணா நிதிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நண்பகல் 12.15 மணிமுதல் 1.15 மணிவரை இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

ஈழத் தமிழ் மக்கள் மீதான ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறைகள், மனித உரிமை மீறல்கள் இச் சந்திப்பின்போது கருணாநிதியிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விளக்கியுள்ளனர்.

முதல்வர் கருணாநிதியை தமிழ்த் தேசியக் கூட்டமைபின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துப் பேசியபோது ஈழத்தமிழ் மக்கள் படும் துயரங்களை விவரித்தனர். அதனைப் பரிவோடு கேட்டுக் கொண்ட முதல்வர், இந்திய அரசாங்கத்திடம் இது விடயமாக பேசுவதாகக் கூறினார்.

உங்களின் உள்ளக் குமுறலை நான் தெளிவாக அறிந்திருக்கிறேன். என்னால் சட்டங்களுக்குட்பட்டு இயன்ற அத்தனையையும் செய்வேன் - என்று முதல்வர் தெரிவித்தார்.

இச் சந்திப்பின்போது தமிழ்நாடு உள்ளாட்சித்துறை அமைச்சர் மு.க. ஸ்டாலினும் முழுமையாக உடனிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்திய அரசின் அழைப்பின் பேரிலேயே தற்சமயம் இந்தியா சென்றுள் ளனர் என்றும் -

சந்திப்புக்காக ஏற்கனவே விடுக்கப்பட்ட கோரிக்கையைத் தமிழக முதல்வர் கருணாநிதி ஏற்றுக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சென்னைக்கு வருமாறு அழைத்திருந்தார் என்றும் தகவல்கள் தெரிவித்தன.

சென்னை விஜயத்தை முடித்துக் கொண்டு அங்கிருந்து புதுடில்லி செல்லும் கூட்டமைப்புக் குழு வினர் அங்கு இந்திய அரசியல் பிரமுகர்களுடன் சந்திப்புகளை மேற்கொள்வர் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ-ஐ)

## இலங்கை மனித உரிமை மீறல்கள் பற்றி பாப்பரசர் அதிர்ச்சியடைந்துள்ளார்

### ரோமாபுரி தூதுவர் மரியோ செனாரி தகவல்

கொழும்பு, டிசெ.21

இலங்கையில் பல்வேறு வகைகளில் மனித மற்றும் சிவில் உரிமைகள் மீறப்பட்டுவருவது குறித்து போப்பாண்டவர் 16 ஆவது பெனடிக்ட் பெரிதும் அதிர்ச்சிக்குள் ளாகியுள்ளார் என்று பாப்பரசரின் இலங்கைக்கான தூதுவர் மேற்றிராணியார் மரியோ செனாரி தெரிவித்துள்ளார்.

டிசெம்பர் 6ஆம், 7ஆம் திகதிகளில் வன்செயல்கள் மலிந்துள்ள யாழ்ப்பாணப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்துவிட்டுத் திரும்பியுள்ள மேற்றிராணியார் மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார். ஐ.நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் அனுசரணையில் பாப்பரசரின் தூதுவர் வன்செயல்களால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு விஜயம் செய்திருந்தார்.

மட்டக்களப்பின் கத்தோலிக்கரான அரசியல் வாதியொருவர் தேவாலயம் ஒன்றில் வைத்து கொலை செய்யப்பட்டும் 2004ஆம் ஆண்டு ஆழிப்பேரலை அழிவுக்குள்ளாகியும் வடக்கு-கிழக்கில் மீண்டும் சிவில் யுத்தம் ஆரம்பமாகியுள்ள நிலையிலும் மீண்டும் இந்த நாட்டில் அமைதி திரும்பி சமாதானம் உருவாகும் என்பதில் தமக்கு நம்பிக்கை இருப்பதாக பாப்பரசரின் தூதுவர் தெரிவித்துள்ளார்.

பிரச்சினையின் முக்கிய அம்சம் என்னவென்றால் தீவிரமானதொரு மாற்றம் தேவைப்படுகின்றது. வேதனைக்குரிய இந்தப் பிணக்கில் சிக்குண்டுள்ள கிறிஸ்தவர்கள் உட்பட அனைவருக்கும் மனமாற்றம் ஒன்று அவசியமாகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார்.

பாப்பரசரின் தூதுவர் யாழ்ப்பாணத்தில் இருந்த சமயம் கடந்த ஆகஸ்ட் மாதம் அல்லைப்பிட்டியில் கத்தோலிக்க குருவானவரான பிதா ஜிம்பிறவுண் அவர்களுடன் காணாமற்போன வென்ஸ்லாஸ் விமலதாஸின் துணைவியாரை சந்தித்துப் பேசியுள்ளார்.

அவர் கடந்த செப்ரெம்பரில் ரோமாபுரியில் இருந்த சமயம் பாப்பரசரிடம் மேற்படி இருவரும் காணாமல் போயுள்ள சம்பவம் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளார்.

இவைகள் பற்றியும் ஏனைய மனித உரிமை மீறல்கள் குறித்தும் கேள்வியுற்ற பாப்பரசர் அதிர்ச்சியடைந்தார் என்று மேற்றிராணியார் தெரிவித்துள்ளார்.(ப)

## தாண்டிக்குளத்தில் கிளைமோர் தாக்குதல் சிப்பாய் படுகாயம்

வவுனியா, டிசெ.21

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் நேற்று நண்பகல் 12.10 மணியளவில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் படுகாயம் அடைந்திருப்பதாக வவுனியா பொலீஸார் தெரிவித்தனர்.

ஏற்கனவே விவசாய கல்லூரி வளாகத்தினுள் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்திற்கு அருகில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

உழவு இயந்திரம் ஒன்றைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல் காரணமாக படுகாயம் அடைந்த இராணுவ சிப்பாய் வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அனுராதபுரம் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

ஏ-9 சாலையில் குவிக்கப்பட்டு இருந்த கற்குவியலுக்குள் இந்த கிளைமோர் மறைத்து வைக்கப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டு இருப்பதாக வவுனியா பொலீஸார் தெரிவித்தனர். (அ-164)

## முட்டை விலை 30 ரூபாவாக குறைந்தது

யாழ்ப்பாணம், டிசெ.21

கால்நடைத் தீவனத்திற்கான தட்டுப்பாடு நீங்கியதை அடுத்து முட்டையின் விலை 30 ரூபாவாகக் குறைத்துள்ளதாக கோழிப்பண்ணையாளர் தெரிவித்துள்ளனர். தொடர்ந்தும் விலை குறைக்கப்படலாம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

குடாநாட்டில் கால்நடைத் தீவனத்திற்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை அடுத்து முட்டையின் விலையில் திடீர் ஏற்றம் ஏற்பட்டது. ஒரு முட்டையின் விலை ரூபா 50 வரை விற்கப்பட்டது.

தற்போது தேவையான தீவனம் சங்கங்களுக்கூடாக விநியோகிக்கப்படுகின்றன. இதனையடுத்து 32 ரூபாவரை குறைக்கப்பட்ட முட்டையின் விலை நேற்று 30 ரூபாவாகக் குறைவடைந்துள்ளது என பிரபல கோழிப் பண்ணையாளர் ஒருவர் தெரிவித்தார். (202)

## அவசர கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமாவைப் பூர்த்திசெய்து வெளியேறி இதுவரை ஆசிரிய நியமனம் கிடைக்கப்பெறாத அனைவருக்குமான கலந்துரையாடல் ஒன்று யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் நாளை வெள்ளிக்கிழமை, காலை 10 மணியளவில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சமய சந்நிதியில்

கோண்டாவில் யாழ். சபரீச ஐயப்பன் ஆலய தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

தீர்த்தத்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். (202)

## வல்லை வீதியில் இளைஞனின் சடலம்

யாழ்ப்பாணம், டிசெ.21

தொண்டைமானாறு வல்லை வீதியில் இளைஞன் ஒருவரது சடலம் சூட்டுக் காயங்களுடன் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது.

பொலீஸாரினால் வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ள சடலத்தை இனங்காண உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது.

முப்பது வயது மதிக்கத்தக்கவரின் இந்த சடலத்தில் நீல நிற நீளக்காற்சட்டை அணிந்திருக்கக் காணப்பட்டது. (1)

## நாளை

மார்கழி 07

வெள்ளிக்கிழமை

22.12.2006

திதி : துதியை

முன்னிரவு : 07.11

நட்சத்திரம் : பூராடம்

பிற்பகல் : 12.30

சுபநேரம் : 06.25 - 07.55

ராகுகாலம் : 10.55 - 12.25

## தமிழீழ விடுதலைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாளர்கள், கல்வியாளர்கள் என அனைத்துத் தரப்பினரும் இராணுவத்தாலும் அவர்களுடன் இணைந்துள்ள துணைப் படையினராலும் படுகொலை செய்யப்படுகின்றனர். ஆனால் இந்தப் படுகொலை தொடர்பில் ஒருவர் கூட கைது செய்யப்படவில்லை.

தமிழ் மக்களை படுகொலை செய்து கொண்டே மறுபக்கத்திலே பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று கூறி சர்வதேச நாடுகளை சிறிலங்கா அரசாங்கம் முட்டாளாக்கு கிறது.

தமிழர் தாயகத்தைப் பிளவுபடுத்தி வடக்கு - கிழக்கு மக்களைப் பிளவுபடுத்தி தமிழர் விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தவே சிறிலங்கா அரசாங்கம் செயற்படுகிறது.

எமது தாயகமான இலங்கையின் வடக்கு - கிழக்கில் நாம் சுதந்திரமாக வாழ விரும்பு கிறோம். பேச்சுவார்த்தைகள் தமிழ் மக்களுக்கு எதனையுமே வழங்காத நிலையில் நாங்கள் தொடர்ந்தும் பேசுவதில் பய னில்லை.

சிறிலங்கா அரசாங்கத்தில் கடும் போக்காளர்களே உள்ளனர். மகிந்த ராஜபக்ஷவின் தம்பி கோத்தபாய ராஜபக்ஷ மிகக் கடும் போக்காளர். ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்றவை சிங்கள தீவிரவாத இயக்கங்கள்.

தமிழ் மக்களை அழித்தொழிக்கும் சிறி லங்கா அரசாங்கத்தின் அடாவடித்தனங்களுக்கும் அட்டூழியங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

தமிழ் மக்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் அழித்து முழு இலங்கையை யும் பௌத்த சிங்கள நாடாக மாற்ற வேண்டும் என்ற ஒரே இலக்கோடு மட்டுமே சிறிலங்கா அர சாங்கம் செயற்படுகிறது.

இலங்கையில் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளமை குறித்து சர்வதேச சமூக நாடுகளுக்கும் நாம் எடுத்துக் கூறினோம். ஆனால், அந்நாடுகள் கை விரித்து விட்டன.

ஆகையால் இயல்பாகவே யார் எங்களுக்கு தஞ்சம் அளிக்க வேண்டுமோ, யார் எங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமோ, அந்த இந்தியாவுக்கு நாம் மீண்டும் வந்துள்ளோம். தற்போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழக முதல்வரான - உலகத் தமிழர்களின் தலைவர் கலைஞர் மு.கருணாநிதியைச் சந்தித்து எங்கள் மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க - எங்கள் மக்கள் சாவிலிருந்து தப்பித்து உயிர் வாழ நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளோம் - என்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் நடைபெற்ற ஊர்வலத்தில் தேசத்தின் குரல் பாலசிங்கத்தின் உருவப்படம் தாங்கிய ஊர்வலம்







அமரரின் உருவப்படத்துக்கு மதத்தலைவர்கள், போராளிகள், பிரமுகர்கள் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துகிறார்கள்.





மதியுரைஞர் அன்டன் பாலசிங்கத்தின் அஞ்சலி நிகழ்வு சென்னை, கோட்டூர் புரத்தில் உள்ள உலகத்தமிழர் பேரவையின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அங்கு புரட்சிக் கவிஞர் காசி ஆனந்தன் உருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கிறார். தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் உரை நிகழ்த்துகிறார்.

## தேசத்தின் குரல் மதியுரைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேளை சமகாலத்தில் வன்னியி லும் விசேட இடம் ஒன்றில் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் இறுதி அஞ்சலி வைபவம் ஒன்று நடத்தப்பட்டது. வன்னியில் விசேடமாக ஏற்பாடு செய்யப் பட்ட இறுதி வணக்க நிகழ்வில் கலந்து கொண்டோா லண்டன் நிகழ்வு களை நேரடியாகச் செவிமடுப்பதற்கான நேரடி ஒலிபரப்பு வசதிகள் அங்கு செய் யப்பட்டிருந்தன.

வன்னியில் நடந்த வைபத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் ஆற்றிய அஞ்சலி உரைகள் சமகாலத்தில் லண்டனில் அலெக்ஸான்டிரா மாளிகையிலும் ஒலிபரப்பப்பட்டன.

மலர்ச்சாலை ஒன்றில் வைக்கப்பட்டிருந்த அன்டன் பாலசிங்கத்தின் உடல், லண்டன் நேரப்படி நேற்றுக் காலை 8 மணியளவில் உரிய மரியா தைகளுடன் - காவலர்களின் அணி வகுப்புடன் - வடக்கு லண்டனிலுள்ள அலெக்ஸான்டிரா மாளிகைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பொது மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப் பட்டது.

மாளிகையின் உயர் மண்டபத்தில் வைக்கப் பட்டபோது அங்கு குழுமியிருந்தோர் விம் மிக் கண்ணீர் வடித்தனர். கனத்த மௌனம் அங்கு குடிகொண்டது.

ஐரோப்பிய நகரங்கள் பலவற்றிலும் இருந்து லண்டனுக்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான புலம்பெயர் தமிழர்கள், மாளிகைக்கு வெளியே நீண்ட வரிசையில் காணப் பட்டனர்.

பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் என்ற வேறுபாடின்றி பாலா அண்ணைக்குப் பெருவாரியானோர் தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

அலெக்ஸாண்டிரா மாளிகையில் இடம் பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் சர்வதேச நாடுகளின் கிளைப் பொறுப்பாளர்கள், நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், தமிழகத்தின் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல்.திருமாவளவன், தமிழ்க்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட பலரும் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

**வன்னியிலிருந்து இரங்கல் உரைகள் அஞ்சல்**

வன்னியிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், கடற் புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, காவல்துறைப் பொறுப் பாளர் பா.நடேசன் உட்பட தளபதிகளும், முக்கிய பொறுப்பாளர்களும் வழங்கிய அஞ்சலி உரைகளும் நேரடியாக - செய்மதி ஊடாக - அலெக்ஸாண்டிரா மாளிகையில் ஒளிபரப்பப்பட்டன.

திருமதி அடேல் பாலசிங்கம், தமிழர்களின் பாரம்பரிய உடையான சேலை அணிந்திருந்தார். தமது கணவரின் பிரிவுத் துயர் தாங்காமல் அவர் விம்மி விம்மி அழுதார். அவரது தாயார் மற்றும் குடும்ப உறுப்பினர்களும் பாலாவின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு அடேல் அம்மையாருக்கு ஆறுதல் கூறித்தேற்றினர்.

சுமார் ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு தேசத்தின் குரலுக்கு தமது இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

மண்டபம் நிரம்பி வழிந்து வெளியிலும் மக்கள் திரண்டு நின்றனர். வெளியே காத்திருக்கும் மக்கள் உள்ளே வந்து அஞ்சலி செலுத்த வசதியாக, ஏற்கனவே அஞ்சலி செலுத்திவிட்டு மண்டபத்தி னுள்ளே அமர்ந்திருந்தவர்களை வெளியேறி இடம் விடுமாறு நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துக்கொண்டிருந்தனர். அலெக் ஸாண்டிரா மாளிகை யில் அஞ்சலி நிகழ்வு முடிந்ததும் அங்கிருந்து மதியுரைஞர் பாலா வின் உடல் லண்டன் நேரப்படி பி.ப. 3 மணிக்கு 'நியூ சவுத் கேற்' மயானத்துக்கு எடுத்துச்செல்லப் பட்டது.

பாலா தம்பதியரின் குடும்ப உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்கள், புலிகளின் சர்வதேசக் கிளைப் பொறுப்பாளர்கள், சில ஊடகவியலாளர்கள் என சுமார் முப் பது பேர் வரையிலேயே மயானத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இறுதியாக புலிகளின் பொறுப்பாளர்கள் பாலாவின் உடல் தாங்கிய பேழையை தமது தோள்களில் சுமந்துசென்று தகனம் செய் யப்படும் இடத்தில் வைத்தனர். பின்னர் அங்கிருந்த திரைச் சீலை மூடப்பட்டது. அங்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப் பாளர் றெஜி உரையாற்றினார். அதன்பின் னர் அனைவரும் அங்கிருந்து திரும்பினர். (அ-ஐ-உ-த)

## குடாநாட்டில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கதினம் காரணமாக நேற்று யாழ். குடாநாட்டில் முக்கிய சேவைகள் தவிர்ந்த ஏனைய செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பித்தன.

ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் வசதி கருதி போக்குவரத்துச்சபை மற்றும் தனியார் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்றன.

யாழ். நகரப் பகுதியில் மருந்தகங்கள், உணவகங்கள் தவிர்ந்த ஏனைய தனியார் வர்த்தக நிலையங்கள் நேற்று முற்றாக மூடப்பட்டிருந்தன. தனியார் கல்வி நிலையங்களும் இயங்கவில்லை.

யாழ். செயலகம் உட்பட சில முக்கிய அரச அலுவலகங்களில் பணிகள் ஒருசில மணி நேரம்மட்டுமே இடம்பெற்றன. ஏனைய அரச அலுவலகங்களில் ஊழியர்களின் வரவு மிகக் குறைவாகக் காணப்பட்டது. வங்கிகளின் செயற்பாடுகளும் ஒரு சிலமணிநேரம் நடைபெற்றபின் இடை நிறுத்தப்பட்டன. போதனா வைத்திய சாலையில் நோயாளர்களின் வரவும் மிகக் குறைவாகவே காணப்பட்டது.

கள நடமாட்டம் குறைந்து காணப்பட்டமையால் யாழ். நகரப்பகுதி வெறிச்சோடி அமைதி நிலவியது. போக்குவரத்து சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெற்றபோதும் பயணிகளின் எண்ணிக்கையும் குறைவாகவே இருந்தது. இதேவேளை -

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பகுதிகளிலும் நேற்றுப் பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இப்பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் முற்றாக மூடப்பட்டிருந்தன. சந்தைகளும் இயங்கவில்லை. அரச அலுவலகங்களிலும் ஊழியர்களின் வரவு மிகக் குறைவா கக் காணப்பட்டது. வீதிகள் சன நடமாட்டம் இல்லாமையால் அவை வெறிச்சோடிக் காணப்பட்டன.

சில இடங்களில் மிகவும் அமைதியான முறையில் 'தேசத்தின் குரல்' அன்ரன் பால சிங்கத்தின் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன. யாழ். இந்துக் கல்லூரியிலும் அஞ்சலி நிகழ்வு நேற்றுக்காலை நடைபெற்றது. இதில் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்கள். (ஐ-88-153)

## தேசத்தின் குரல் பாலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்ல அதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள், மதத் தலைவர்கள், பொதுமக்கள் ஆகியோர் ஊர்வலமாகச் சென்றனர்.

ஊர்வலம் கிளிநொச்சி பிரதேசசபை முன்னாக நிறைவடைந்தது. பின்னர் அங்கு சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த அரங்கில் அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரினை நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா ஏற்றி வைக்க, தேசியக் கொடியை வட போர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றினார். அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து மதகுருமார், பெரியார்கள் மாலைகளை அணிவித்தனர்.

நிகழ்விற்கு கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன் தலைமை வகித்தார். இந்நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர். (த-352)

## யாழ். இந்து ஆரம்ப....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகில இலங்கையில் தமிழ் மொழி மூல மாணவரில் முதலிடம் பெற்றுள்ளார்.

யாழ்.சென்.ஜோன் பொஸ்கோ பாடசாலையில் 75 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். பா.சிவயோகன் என்ற மாணவன் 170 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

தமிழ்மொழி பிரிவில் - முதல் பத்து இடங்களில் - சுந்தரேஸ்வரன் வித்தியாசாகர் 185 புள்ளிகளைப் பெற்று முதலிடத்திலுள்ளார்.

இரண்டாவது இடத்தைக் கல்முனை கார்மேல் பாத்திமா பாடசாலையைச் சேர்ந்த சுதாகரன் கஷிதராஜ் பெற்றுள்ளார். இவர் எடுத்த புள்ளிகள் 184 ஆகும்.

சிலாபம் - மதவாக்குளம் முஸ்லிம் பாடசாலையைச் சேர்ந்த ஏ. மொஹமட் அஸார் என்ற மாணவன் 183 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

நாகராஜா டிலூஷன் (கொழும்பு இந்துக் கல்லூரி), ஜே.எம். மொஹமட் முனாசிவ் (புத்தளம் ஸாகிரா தேசியப் பாடசாலை), ஜெகசிங்கம் அஜந்தசிங்கம் (கொழும்பு இந்துக் கல்லூரி), அர்ஷாட் அஹமட் (கேகாலை முஸ்லிம் மகாவித்தியால யம்) எம்.வை.எம். பாஹிட் இம்னாஸ் (கல்முனை அல் மிஷ்பா வித்தியாலயம்), சந்திரகுமாரன் தர்ஷிகா (ஆரையம்பதி ஆர்.கே.எம். தமிழ் வித்தியாலயம்), இராஜநாதன் நிமோஜா (பட்டிருப்பு மகாவித்தியாலயம்) ஆகியோர் முறையே நான்கு முதல் பத்து வரையான நிலைகளைப் பெற்றுள்ளனர்.

பரீட்சைத் திணைக்கள இணையத்தளமான www.doenets.lk என்ற இணையத் தளத்தில் முடிவுகளைப் பார்வையிடலாம்.

யாழ். மாவட்டத்திற்கான வெட்டுப் புள்ளி 133 ஆகும்.

**இன்று வந்து சேரும்**

இதேவேளை - யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் இன்று பிற்பகலில் யாழ். கல்வி வலயத்தில் அதிபர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தன. (அ-1)


**PAPER CLASSES** பிரிவு 2

**ஆரம்பம் : 22.12.2006**

நாளை காலை 9 மணிக்கு

A/L 2007 & 2008

பொருளியல் : G.பிரதீபன்
கணக்கீடு : T.தவேந்திரன்
வணிகக்கல்வி : V.கிருபன்
தமிழ் : W.ஜெயபால்
இரசாயனவியல் : M.A.நிறோசன்
பௌதிகவியல் : K.P.S.விஜயன்

AAC

66, வைரவர் கோயில் வீதி,
அரியாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.12.2006இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.